# அவ்வையார் விருது பெற்ற தனித்துவ எழுத்தாளர் ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா போன்ற புதிய பெண் எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் அறிமுகம் ஆக வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை,ஜூன்.12-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருது பெற்ற திருமிகு ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா அவர்களை வாழ்த்தி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:**

ஒரு சமூகம் எந்தளவுக்கு முற்போக்காகத் திகழ்கிறது என்பதை, அந்தச் சமூகம் எழுத்தாளர்களைக் கொண்டாடுவதைக் கொண்டு அளவிடலாம். எளிய மக்களின் வாழ்வியலைத் தங்களது எழுத்தின் வழியாக உணர்த்தி மாற்றங்களுக்கு வித்திடும் எழுத்தாளர்கள் போற்றுதலுக்குரியவர்கள்.

எழுத்தாளர் பாமா அவர்களை நாம் போற்றுவது காலத்தின் தேவையாகிறது. அவரது தாக்கம் புதிய பெண் எழுத்தாளர்களைத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்ய வேண்டும்.

உடல்நிலை காரணமாகத் தாமதமாக அவர் இந்த ஔவையார் விருதை பெற்றுக்கொண்டிருக்கிறார். அந்த விருதை நான் வழங்கியபோது அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை!

அவர் இன்னும் நிறைய எழுத வேண்டும்! அவரது எழுத்துகள் இன்னும் பலரை எழுதத் தூண்ட வேண்டும்!

சாதி, மதம், பாலினம், இனம் எனப் பல்வேறு அடையாளங்களினூடே ஒடுக்கு முறையின் அரசியலை அழுத்தமாகப் பேசும் 'கருக்கு' எனும் தன்வரலாற்றுப் புதினத்தின் வழியாக உலக அளவில் கவனம் ஈர்த்த எழுத்தாளர் பாமா (எ) பாஸ்டினா சூசைராஜ் அவர்கள் தமிழ்நாடு அரசின் இந்த ஆண்டுக்கான ஔவையார் விருதைப் பெறுகிறார்.

மரபுகளை உடைக்கும் தனித்துவமான எழுத்துநடையால் தமிழிலக்கியத்துக்குப் பங்காற்றி, இந்த விருதுக்குத் தேர்வாகி இருக்கும் அவருக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 40–க்கு 40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெற்றதையொட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.,அறிவிப்பு!

திருவள்ளூர், ஜூன் 12-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் வருகிற நாளை (13.06.2024 - வியாழக்கிழமை) காலை 11.00 மணியளவில் திருவள்ளூர் நகரம் ஐ.வி.ஆர். திருமண மண்டபம் ஆயில்மில் அருகில் மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல் திட்டகுழு உறுப்பினரும், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக் கூட்டத்தில் ஜூன் 15ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் கோவையில் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என "முப்பெரும் விழா" கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் பெருந்திரளாய் கலந்து கொள்வது குறித்து ஏற்பாடு செய்யும் விதத்தில் கூட்டம் நடைபெறுகிறது.

அதுசமயம் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர். இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் வி.சி.ஆர். குமரன், சி.ஜெயபாரதி, பா.உதய மலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே. ஆதாம், வி. கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், ஆகியோர் கலந்துக் கொள்கின்றனர். மேற்கண்ட கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. ஜூன் 15ஆம் தேதி கோவையில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் திரளாய் கலந்து கொள்வது குறித்து. 2. கழக வளர்ச்சி பணி.

இவ்வாறு திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.





இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் நேற்று (11.06.2024) ராயபுரம் மண்டலம், வார்டு 59க்குட்பட்ட எல்லிஸ் புரம் பகுதியில் சிங்காரச் சென்னை 2.0 திட்ட நிதியின் கீழ் ரூ1.62 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டடத்தினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு உட்பட பலர் கலந்து கொண்டனர்.


# கழக இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

கழக இலக்கிய அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 17.6.2024 திங்கள்கிழமை அன்று மாலை 4.30 மணியளவில் எனது (வி.பி.கலைராஜன்) தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்படவிருப்பதால் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** கோவை முப்பெரும் விழா.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி



சென்னை தெற்கு மாவட்ட கழகப் பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரனின் மகன் பா.தருண்ராஜ் – அ.சுஷ்மிதா இணையரின் திருமண வரவேற்பு விழா சென்னை நீலாங்கரையில் நேற்று நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மணமக்கள் இருவரும் பெரியாரும் சுயமரியாதையும் போல நல்வாழ்வு வாழ வாழ்த்தினார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மோ.ரவிக்குமார் தலைமை ! கலாநிதி வீராசாமி - ஐட்ரீம் இரா.மூர்த்தி - வ.பெ.சுரேஷ் முன்னிலை !

# சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முதியோர் இல்லத்தில் உணவு ! நலஉதவிகள் !

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வழங்குகிறார் !

சென்னை, ஜூன் 12 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் இராயபுரம் முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவு மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (12.06.2024 புதன்கிழமை) பகல் 12.00 மணியளவில் இராயபுரம் முதியோர் இல்லத்தில் நடைபெறுகிறது.

மாணவர் அணி துணை அமைப்பாளர் மோ. ரவிக்குமார் தலைமை வகிக்கிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை வடக்கு பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, நலத் திட்ட உதவிகள் வழங்குகிறார்.

தா. இளைய அருணா எம்.சி, ந.மனோகரன், மு. கோபி, நா.சண்முகம், கி. ராஜேந்திரன், வெ.சு.சத்திய நாராயணன், கட்பீஸ். ப. சோமசுந்தரமூர்த்தி, எம். கே.இஸ்மாயில், கு.ரமேஷ், சு.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், க.கோவிந்தசாமி, ஜெ.கே.நாதன், கார்த்திக் செங்குட்வன், நா.கஜேந்திரன், ஜி.எஸ். முருகன், எம்.பாலாஜி, ஜெய்சங்கர், முகம்மது மொய்தீன், எஸ்.சுரேஷ், வட்ட செயலாளர்கள் : எம். எல்.ரவி, இரா.பாலன், ஜெ.கௌரீஸ்வரன், எஸ். புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலா லட்சுமணன், பிரெசிடென்சி.சி.சதீஷ், ந.மா.மகேஷ்குமார், நி.எழிலரசன், எஸ்.சதீஸ்வரி,

ஐசரி கணேஷ், க.லோகநாதன், இ.சௌந்திரபாண்டியன், ஆயிசா, கொலம்பஸ், எம்.தேவராஜன், எம். பாபு, ஜெ.ஸ்டீபன், எம். ஆர்.டி.விஜயகுமார், எஸ். ஆரோக்கியசாமி, எ.ரவிசந்திரன், ஜெ.சரவணன், எம். சம்பத், நா.வீரமுத்து, ஜெ. பாலா, மனோஜ், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

ஜெ.பிரதீப், பி.கோகுல், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### ஏ.ஆர்.பி.எம். காமராஜ் தலைமை! க.வே. மோகன் வரவேற்புரையில்

# 119வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## நே.சிற்றரசு – சைதை சாதிக் – ஆசிப் இறையன்பன் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 12-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119-வது வட்டம் சார்பாக நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (12.06.2024, புதன்கிழமை) ராமராவ் கார்டன் இராயப் பேட்டை சென்னை - 14-ல் நடைபெறுகிறது.

விழாவிற்கு பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் தலைமை வகிக்கிறார். வட்ட செயலாளர் க.வே.மோகன் வரவேற்கிறார்.

இவ்விழாவில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, கழகப் பேச்சாளர் சைதை சாதிக், கொள்கை பரப்பு கழக பாடகர் ஆசிப் இறையன்பன் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

ஆர்.என்.துரை, வே.கமலா செழியன், ரவி ராஜ்குமார், கே.திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ். கலை, ஏ.எஸ்.அகஸ்டின் பாபு, கே.சங்கீதா மற்றும் மருத்துவர் அ.சுபேர்கான், ஏ.எஸ். அகஸ்டின் பாபு, கே.சங்கீதா மற்றும் மருத்துவர் அ.சுபேர்கான், வி.பி. பொன்னரசு, வி.என்.ராஜன், வழக்கறிஞர் வி.பிரகாஷ், மருத்துவர் அபிஸ்யுல்லா, எம்.கே.ஆனந்த், இ.இளம்பாரதி, ரா.பத்மாவதி, ஆர். ரஞ்ஜித்குமார், எல்.பாலு, எஸ்.ரவீந்திரன், க.பாலாஜி, இ.மாரி, ஜி.சேகர், பி.திவ்யா, எஸ்.மகேஸ்வரி, ம.தயாநிதி, சி.தினகரன், எம்.பிரோம் ராஜா, மங்கை ராஜ்குமார், ஐ.சி.எப். எம்.சங்கர், ஜெ.விஜயகுமார், என்.ரவி, கே.பிரபு, கே.ஜி.செந்தில்குமார், எஸ். சசிகுமார் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை சாம்பசிவம்

**ஜூன் 12 (2016)**



**வேலூர் மாவட்டத்தில், கழகத்தின் தொடக்கக் காலத்திலேயே ஆசிரியர் பணியை உதறிவிட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**1957–ல் பேரறிஞர் அண்ணாவால் அடையாளம் காணப்பட்டு குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர்.**

**கே.வி.குப்பம் ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து 15 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.**

**வேலூர் மாவட்ட ஊராட்சித் தலைவராகவும் – கீ.வ.குப்பம் ஒன்றிய பெருந்தலைவராகவும் – முருக்கம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா கைதியாகவும், அதற்கு முன்னர்1962–ல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி, அறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தபோது, அண்ணாவால் "தாடிக்காரர்'என அழைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. வாசுதேவன்

**ஜூன் 12 (2020)**



**தனது இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும், அண்ணாகிராம ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, ஒன்றிய பொருளாளர் என கழகத்தில் பொறுப்புகள் வகித்தவர்.**

**ஊராட்சி மன்றத் தலைவர், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க தலைவர் அருங்குனம் கூட்டுறவு சங்க இயக்குநர் என பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**